**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.**

**முன்னிலை:– திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவர் ஆண்டு 2055 விசுவாவசு வருடம் ஆடித் திங்கள் 28–ம் நாள்
2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13 ஆம் நாள் புதன்கிழமை

இடைநிலை மனு எண்.3/2024
இன்
அசல் வழக்கு எண்.54/2023
(CNR.No.TNTR21-000058-2023)
...

1. C.N. ஆறுமுகம்
2. A. அன்னபூரணி
3. A. லோகேஷ் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

S. தனம்மாள் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 24.07.2025 ஆம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் V. வெங்கடேசன், N. பாலாஜி, P. பிச்சைமணி, ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் C.N. நடராஜன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இருதரப்பு வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கை நிராகரித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11 (a) & (d)–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:–**

(அ) வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தேவையற்றது. வாதி எந்த உரிமையும் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். ஆண்டாள், புஷ்பா, சியாமளா, நிர்மலா ஆகியோர்கள் 1982 ல் வழக்கு சொத்தான புல எண்.273/10A ஐ கிரையம் பெற்றுள்ளதாக பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாதி தாக்கல் செய்துள்ள பிராது 1 வது ஆவணமானது ஆண்டாள் வகையறாவால் மகேந்திரன் என்பவருக்கு கிரையம் கொடுத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 1982 ம் வருட ஆவணத்தை வாதி மறைத்து இந்த பொய்யான வழக்கை, இந்த மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டி தாக்கல் செய்துள்ளார். புல எண்.273/23 பட்டா எண்.4236 ல் இந்த மனுதாரர் பெயரில் பட்டா பெற்றுள்ளார்.

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2025.08.13 11:09:05 +0530

(ஆ) வாதி பிராதில் கூறியுள்ள புல எண்.273/26A க்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமுமில்லை. மகேந்திரனின் முன்கிரையதாரர்கள் ஆவண எண்.39/1982 ன்படி எழுதிக் கொடுத்த சொத்திற்கும், இந்த வழக்கு சொத்தான புல எண்.273/10A க்கும் எந்த சம்மந்தமும் இல்லாமல் கிரையம் பெற்றுள்ளார். மேற்படி பிராது ஆவண எண்.1 ஆனது மாமண்டுர் கிராம கணக்கு சம்மந்தப்பட்டது ஆகும். திருத்தனி கிராம கணக்கு புல எண்.273/10A க்கும் எந்த சம்மந்தமும் இல்லை. வாதிகள் வேண்டுமென்றே உண்மை விவங்கள் தெரிந்தே 1982 ம் ஆண்டு வழக்குமூலம் எழுந்துள்ளது என பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிராகரிக்கத்தக்கதாக உள்ளது.

(இ) வழக்கு சொத்தான புல எண்.273/10A க்கு சம்மந்தமில்லாத ஆண்டாள் வகையறாக்கள், மகேந்திரனுக்கு எழுதிக் கொடுத்த பிராது ஆவண எண்.1 ஆன 39/1982 ஐ தாக்கல் செய்யாமல் உண்மை விவரங்களை மறைத்து பிராது வழக்கு ஆவண எண். 2 முதல் 5 ஐ வாதிகள் உருவாக்கியுள்ளனர். எனவே கற்பனையான, பொய்யான விவரங்களை கூறியதற்காக இந்த வழக்கு நிராகரிக்கத்தக்கதாக உள்ளது. எனவே இந்த வழக்கு நிராகரிக்க வேண்டும்.

2. <u>**மறுப்புரையின் சுருக்கம்:-**</u>

(அ) வழக்கு தாக்கல் செய்யும்போதே 1982 ல் ஆண்டாள், புஷ்பா, சியாமளா, நிர்மலா ஆகியோர்களால் மகேந்திரன் என்பவருக்கு எவ்வித உரிமையும் இல்லாமல் புல எண்.273/10A ஆனது கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிந்தும் அதை மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிராது ஆவண எண் 1 ஆன 12.06.2000 ம் தேதியிட்ட ஆவணத்தின்படி ஆண்டாள் வகையறா மகேந்திரனுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டதை பிராது தயார் செய்யும்போது மறைத்து மனுதாரரின் சொத்துக்களை அபகரிக்க வேண்டிய தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், பட்டா எண்.4238 ல் புல எண்.273/23 க்கு மனுதாரர் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதும், புல எண்.273/26 வழக்கு சொத்துடன் எந்தவகையிலும் சம்மந்தப்பட்டதில்லை என்பதும் மறுக்கப்படுகிறது.

(ஆ) மனு பாரா 4 ல் பிராது ஆவண எண்.1 ஆன மாமண்டுர் கிராம புல எண்.273/10A உடன் சம்மந்தப்பட்டதில்லை என்பது தெரிந்தும் தாக்கல் செய்திருப்பதாக கூறியுள்ளது மறுக்கப்படுகிறது. புல எண்.273/10A க்கு சம்மந்தமில்லாத ஆண்டாள் வகையறாவால் மகேந்திரனுக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்திற்கு முன் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் ஆவணங்களான சட்டப்படி செல்லாத பிராது 2 முதல் 5 ஆவணங்களை தாக்கல் செய்திருப்பதிருப்பதாக கூறியுள்ளது மறுக்கப்படுகிறது. திருத்தணி கிராம கணக்கிற்கு உட்பட்ட பழைய புல எண்.273/10 விஸ்தீரணம் 42 செண்ட் மற்றும் இதர சொத்துக்கள் உண்மையில் ஏகாம்பரம் மற்றும் அவரது சகோதரரின் மகள் வடிவாம்பாள் க/பெ கிருஷ்ணா ரெட்டி ஆகியோருக்கு பாத்தியப்பட்டு அவர்கள் 01.06.1982 ம் தேதியிட்டு ஆவண எண்.1105/1982 ன் படி பாகம் செய்து

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2025.08.13 11:09:15 +0530

கொண்டதில் வடிவாம்பாளுக்கு புல எண்.273/10ல் 10 செண்டும், ஏகாம்பர ரெட்டிக்கு 32 செண்டும் கிடைத்தது.

(இ) வடிவாம்பாள் அவரது மகள்களான ஆண்டாள், புஷ்பா, ஷியாமளா, நிர்மலா ஆகியோர்கள் வழக்கு சொத்தை மனையிடங்களாக பிரித்ததில் மனை எண்16 ஆன புதிய புல எண்.273/10A கிழமேல் 56 அடி, தென்வடல் 22 அடி மொத்தம் 1832 சதுரடி இடத்தை நான்கு எல்லைகளுக்குட்பட்டு மகேந்திரன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளனர். மேலும் அவர் அதை ஜெகன்நாதன் என்பவரிடம் 27.06.2002ம் தேதியிட்டு அடமானம் வைத்து 09.12.2004ம் தேதியிட்டு மீட்டு பின்பு கஜேந்திரன் என்பவருக்கு 09.11.2004ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்து அவர் அனுபவத்தில் எடுத்து, பின்பு கஜேந்திரன் சுப்பிரமணி என்பவருக்கு 02.01.2012ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்து அவர் அனுபவத்தில் எடுத்து வந்தார். பிராதை இதன் ஒரு பாகமாக வாதித்துக் கொள்ள பரிந்துரைக்கப்படுகிறது.

(ஈ) புலஎண்.273/26க்கு பட்டா எண்.6585ல் மனுதாரர் பெயருக்கு பட்டா மாற்றி கொடுத்ததாக சொல்லப்பட்டிருப்பதில் சுப்பிரமணி அவரது மனைவியான வாதிக்கு வழக்கு சொத்தை 18.02.2021ம் தேதியிட்டு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார். அந்த ஆவணத்தை அவர் ஒப்புக்கொண்டு அனுபவத்திற்கு எடுத்து பட்டா எண்.6967ல் தன் பெயருக்கு பட்டா மாற்றியுள்ளார். 1,2 பிரதிவாதிகள் கணவன் மனைவி ஆவார்கள். அவர்கள் 30.09.2023ம் தேதி முதல் வாதியின் அனுபவத்தில் இடைஞ்சல் செய்து வருகிறார்கள். வழக்கு சொத்தை அவர்கள் எந்த ஆவணங்களும் இல்லாமல் அடைய முயற்சிக்கிறார்கள். மனுதாரர்களுக்கு எந்த அனுபவமோ உரிமையோ இல்லை. பொய்யான ஆவணங்களின் மூலம் இந்த பொய் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சமநிலை நோக்கு மனுதாரர்களுக்கு ஆதரவாக இருப்பதாக கூறுவது மறுக்கப்படுகிறது. இந்த மனுவில் எந்த நல்லெண்ணமும் இல்லை. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. <u>தீர்வுக்குரிய பிரச்சனை:–</u>

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4. <u>தீர்வு:–</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு சொத்தின் உண்மை விவரங்கள் தெரிந்தே மறைத்து பிராது தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், பிராதுடன் தாக்கல் செய்துள்ள 1வது ஆவணமான 1406/2000 கிரைய ஆவணத்தில், பத்திர எண்.39/1982ன்படி கிடைத்தது என்று கூறிப்பட்டிருப்பதாகவும், மேற்படி பத்திர எண்.39/1982ஐ மறைத்து பொய்யான ஆவணங்களின் படி தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், மேற்படி முன் ஆவணத்தில் திருத்தணி கிராமம் சொல்லப்படவில்லை என்றும் மாமண்டுர் கிராமம்தான் காட்டப்பட்டுள்ளது என்றும், வாதி பாத்தியம் கோரும்

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2025.08.13 11:09:24 +0530

ஆவணம் உண்மையில் மாமண்டுர் கிராம சொத்திற்குரியது என்றும், உண்மை விவரங்களை மறைத்து பொய்யான விவரங்களை கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த பிராது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும் எனவே இந்த வழக்கு பொய்யானது மற்றும் உண்மை வழக்குமூலத்தை கூறவில்லை என்ற அடிப்படையில் நிராகரித்து உத்தரவிட கோரி வாதிடப்பட்டது.

5. இந்த வழக்கு உண்மை விவரங்களின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி பிராது 1ம் ஆவணத்திலேயே திருத்தணி கிராம புல எண்.273/10 ல் 4 வது நபர் நிர்மலாவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவ்வாறே A ஷெட்டியூல் 1 வது இலக்கமாக திருத்தணி கிராம புல எண்.273/10 விஸ்தீரணம் 42 செண்டில் 16 செண்ட் ஆண்டாள் என்பவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் இவ்வழக்கு உண்மை விவரங்களை மறைத்து தாக்கல் செய்யப்படவில்லை என்றும் வாதி தேவையற்று பிரதிவாதிகளை அலைக்கழிவு செய்ய வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே மனுவை தள்ளுபடி செய்ய கோரி வாதிடப்பட்டது.

6. பிராதில் வழக்கு சொத்து 1982 ல் ஆண்டாள், புஷ்பா, ஷியாமளா, நிர்மலா ஆகியோர்கள் கூட்டாக கிரையம் பெறப்பட்டு என கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் ம.சா.ஆ.1 ஆவணத்தில் "பத்திர எண்.39/1982 ன் எங்களுக்கு கிடைத்து" என்று கூறப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.10 ஆனது மேற்படி ஆவண எண்.39/1982 ன் இணைய வழி பதிவிறக்க நகல் ஆகும். 1982 ம் வருடத்திய ஆவண எண்.39 ன்படி உயில் மூலம் மேற்படி ஆண்டாள் வகையறாவுக்கு வழக்கு சொத்து கிடைக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

7. மேற்படி ஆவணத்தில் ஆண்டாளுக்கு A ஷெட்டியூலில் "செங்கல்பட்டு டிஸ்ரிக்ட், திருத்தணி சப்டிவிஷன், திருத்தணி தாலுக்கா திருத்தணி கிராமம் கணக்கு .... 273/10 விஸ்தீரணம் 0.42 செண்டில் பாறைக்கும் கிழக்கு மேற்கு வடுவாம்பாள் நிலத்திற்கும் வடக்கு, D ஷெட்டியூல் நிலத்திற்கும் தெற்கு இதற்கு மத்தியில் 0.16 செண்ட்" என உள்ளது. அவ்வாறே மேற்படி ஆவணத்தில் நிர்மலாவுக்கு D ஷெட்டியூலில் "திருத்தணி கிராமம் கணக்கு.... 273/10 0.42 செண்டில் பாறைக்கும் கிழக்கு மேற்கு வடுவாம்பாள் நிலத்திற்கும் வடக்கு, A ஷெட்டியூல் நிலத்திற்கும் வடக்கு இதற்கு மத்தியில் 0.16 செண்ட்" என உள்ளது. எனவே மேற்படி 1982 ம் ஆவணத்தில் மாமண்டுர் கிராம சொத்து குறிப்பிடப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ள விவரம் உண்மையில்லை என்பதும், திருத்தணி கிராம புல எண்.273/10 ஆன வழக்கு சொத்துதான் மேற்கண்ட ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது. மனுதாரர் வேண்டுமென்றே அசல் வழக்கின் விசாரணையை காலங்கடத்த வேண்டி பொய்யாக அலைக்கழிவாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரரின் மனு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2025.08.13 11:09:49 +0530

இறுதியாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. அவரவர் செலவுத் தொகையை அவரவரே ஏற்றுக் கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2025.08.13 11:09:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.

மனுதாரர் தரப்பு சாட்சி:– இல்லை

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.த.சா.ஆ.1 | 06.01.1982 | கிரைய ஆவணம் – இணையவழி நகல் |
| 2. | ம.த.சா.ஆ.2 | 26.06.2024 | கணிணி பட்டா எண்.4236 – இணையவழி நகல் |
| 3. | ம.த.சா.ஆ.3 | 01.06.1982 | கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் |
| 4. | ம.த.சா.ஆ.4 | 05.09.2011 | கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் |
| 5. | ம.த.சா.ஆ.5 | 18.10.2004 | பாகப்பிரிவினை ஆவணம் – சான்றிட்ட நகல் |

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி :– இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–

| | | | |
|---|---|---|---|
| 1. | எ.ம.த.சா.ஆ.1 | 12.06.2000 | பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் – அசல் |
| 2. | எ.ம.த.சா.ஆ.2 | 27.06.2002 | ஈடுகாட்டிய அடமான கடன் பத்திரம் – அசல் |
| 3. | எ.ம.த.சா.ஆ.3 | 09.12.2004 | பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் – அசல் |
| 4. | எ.ம.த.சா.ஆ.4 | 02.01.2012 | பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் – அசல் |
| 5. | எ.ம.த.சா.ஆ.5 | 18.02.2021 | பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் – அசல் |
| 6. | எ.ம.த.சா.ஆ.6 | 18.02.2021 | கணிணி பட்டா எண்.6585 – இணையவழி நகல் |
| 7. | எ.ம.த.சா.ஆ.7 | 04.03.2021 | கணிணி பட்டா எண்.6967 – இணையவழி நகல் |
| 8. | எ.ம.த.சா.ஆ.8 | 07.11.2023 | சொத்து தொடர்பான வில்லங்கச் சான்று – இணையவழி |
| 9. | எ.ம.த.சா.ஆ.9 | 01.06.1982 | பாகப்பிரிவினை ஆவணம் – சான்றிட்ட நகல் |
| 10. | எ.ம.த.சா.ஆ.10 | 05.12.1982 | உயில் ஆவணம் – சான்றிட்ட நகல் |

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2025.08.13 11:09:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.